

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழிகாட்டுதலின் படி, தி.மு.க. கழக மாநில மருத்துவ அணி இணை செயலாளர் டாக்டர் ஆர்.அண்ணாமலை ரகுபதி ஒருங்கிணைப்பில், திருமயம் சட்டமன்ற தொகுதி, பொன்னமராவதி வடக்கு ஒன்றியத்தில் உள்ள கொன்னையம்பட்டி ஊராட்சியில், இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மருத்துவ முகாமினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்கள்

### துணை முதல்வர் பிறந்த நாள்! டாக்டர் ஆர்.அண்ணாமலை ரகுபதி ஏற்பாட்டில்

# பொன்னமராவதி வடக்கு ஒன்றியத்தில் இலவச மருத்துவ முகாம்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, டிச.3-

கழக இளைஞரணி செயலாளர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு,

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழிகாட்டுதலின் படி, திமுக கழக மாநில மருத்துவ அணி இணை செயலாளர் டாக்டர் ஆர்.அண்ணாமலை ரகுபதி ஒருங்கிணைப்பில், திருமயம் சட்டமன்ற தொகுதி, பொன்னமராவதி வடக்கு ஒன்றியத்தில் உள்ள கொன்னையம்பட்டி ஊராட்சியில், இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம் மருத்துவமுகாமில் கண், காது, பல் மற்றும் ULTRASOUND, ECG SCAN போன்ற மருத்துவ பரிசோதனைகளும், BLOOD TEST, SUGAR, LOW PRESSURE, XRAY உள்ளிட்ட மருத்துவ சேவைகள் மற்றும் சிகிச்சைக்கான மருந்து,மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டது. இந்த முகாமில் பொது மக்கள் அனைவரும் தங்களுடைய குடும்பத்தார் மற்றும் நண்பர்களுடன் இணைந்து கலந்து கொண்டு சிகிச்சைகள் பெற்று பயனடைந்துள்ளனர்.

இந்த முகாமில் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மருத்துவ முகாமினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றி னார்கள் மாநில மருத்துவ அணி இணை செயலாளர் மருத்துவர்.

ஆர். அண்ணாமலை ரகுபதி MBBS,Ms(ortho)., Mch (ortho)UK அவர்கள் மற்றும் பொன்னமராவதி வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் திரு.முத்து அவர்கள் மற்றும் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். மேலும் "உங்க டாக்டர் அண்ணாமலை" அவர்கள் இலவச மருத்துவ ஊர்தி அமைத்து மக்களுக்கு இலவச மருத்துவ சேவைகளை நேரடியாக கொண்டு செல்லும் நோக்கத்தோடு அனைத்து ஊராட்சிகளிலும் நடைபெற உள்ளது. கிராமப் புறங்களில் மருத்துவ சேவையை அணுகலாம் என்ற நோக்கத்துடன் இந்த முகாம்கள் நடத்தப்படுகின்றன, மற்றும் பொதுமக்களின் ஆரோக்கியத்திற்காக இந்த முகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது..!

மேலும் திருமயம் சட்டமன்றத் தொகுதிகளில் இலவச மருத்துவ சேவைகள் மேலும் பல ஊராட்சிகளில் நடக்க இருக்கிறது.

# நாகையில் டித்வா புயல் மீட்பு நடவடிக்கைகள் - முகாம்களில் நிவாரண பொருட்கள்!

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்! என்.கௌதமன் பங்கேற்பு!

நாகை, டிச.3-

நாகை மாவட்டம் நாகையில் உள்ளயகாடம்பாடி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட மழையால் பாதிக்கப்பட்டு நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு பள்ளிகல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிவாரண பொருட்களை வழங்கினார்.

நாகை மாவட்டம் நாகை நகராட்சி காடம்பாடி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட மழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை நிவாரன முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து நிவாரண முகாமுக்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேரில் சென்று பார்வையிட்டு நாகை நகராட்சிக்குட்பட்ட சூர்யாநகர் பகுதியைச் சேர்ந்த 48 குடும்பங்களைச் சேர்ந்த 89 நபர்களுக்கு தேவையான உணவுகள், குடிநீர், மருத்துவ வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்து, குடை, போர்வை உள்ளிட்ட தேவையான நிவாரணப் பொருட்களை வழங்கினார்.நிகழ்ச்சியில்

நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ், நாகை சட்டமன்ற உறுப்பினர். ஜெ.முகம்மது ஷாநவாஸ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சு.செல்வகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் கா.ராஜேந்திரன், மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி.மனோகரன், நாகை நகர கழக செயலாளர் நகர் மன்ற தலைவர் இரா. மாரிமுத்து, நாகூர் நகர கழக செயலாளர் எம். ஆர். செந்தில்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் . மகா.குமார், சிக்கல் என். ஆனந்த், நாகை நகராட்சி ஆணையர்.டி.லீனாசைமன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, பி.என். கார்த்தி, அ.பாரிபாலன், சுரேந்தர், மாவட்ட சார் பணி துணை அமைப்பாளர்கள் சரவணன், எஸ். செல்வா, ரெக்ஸ், நாகை நகர நிர்வாகிகள் பி.திலகர், அபபக்கர், நாகை தெற்கு ஒன்றிய துணை செயலாளர் திருநாவுக்கரசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர் பள்ளிகல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து உதவிகளும் விரைந்து வழங்கப்பட்டு வருகின்றன. நிவாரண் முகாமில் உள்ளவாகளுக்கு எவ்வித குறையும் இன்றி அனைத்து வசதிகளும் செய்து தரப்படும். மீட்பு கணிகள் மற்றும் சீரமைப்பு பணிகள் போர் கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன. மேலும் மழைநீர் முழுமையாக வடிந்த பிறகு சேதங்களை கணக்கிட்டு இழப்பீடுகளும், உள்கட்டமைப்புகளைச் சீரமைக்கும் பணிகளும் விரைந்து முடிக்கப்படும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கக்கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்டு இப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை தங்க வைப்பதற்கு 11 புயல் பாதுகாப்பு மையங்களும், 6 பல்நோக்கு மையங்களும், 340 அரசு பள்ளி, கல்லூரி கட்டிடங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. தற்போது தற்காலிகமாக 10 நிவாரண முகாம்களில் 1129 நபர்கள் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன என பேட்டி தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து நாகப்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் டித்வா புயல் காரணமாக மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு நடவடிக்கைகள் குறித்து பள்ளிகல்வித் துறை அமைச்சர்அன்பில் மகேஷ் பொய்யாமொழி அரசு அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.



அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியத்தில் "சிவசங்கர் அறக்கட்டளை சார்பில் ஆண்டிமடம் அரசு மேல்நிலைப்பள்ளியில், 10–11–12 ம் வகுப்பு மாணவ – மாணவியருக்கு, பொதுத்தேர்வுகளை எளிதாக எதிர்கொள்ள உதவும் "தேர்வை வெல்வோம் வழிகாட்டி வினா–விடை தொகுப்பு, மற்றும் குடிநீர் பாட்டில்களை அனைத்து மாணவ, மாணவியர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் ஒன்றிய பொறுப்பாளர்கள் ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், ஆர்.செந்தில்குமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாணவ, மாணவியர்கள், ஆசிரியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருநாவலூர் கிழக்கு ஒன்றிய இளைஞரணி சார்பில், கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர், ஜி.ஆர்.வசந்தவேல் தலைமையில், வீ.சு.வீரபாண்டியன், கே.ஆர்.ஜெகதீசன் ஆகியோர் முன்னிலையில், துப்புரவு பணியாளர்கள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டவர்களுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் பிறந்த நாள்! ஊத்தங்கரை வடக்கு ஒன்றியத்தில்

# தூய்மைப் பணியாளர்களுக்கு நல உதவிகள் - 1000 பேருக்கு உணவு!

### மாவட்டச் செயலாளர் தே. மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

கிருஷ்ணகிரி, டிச.3-

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு வடக்கு ஒன்றிய திமுக சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவி மற்றும் புதிய அலுவலகம் திறப்பு விழா மற்றும் 1000 பேருக்கு அசைவ உணவு அன்னதானம்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வடக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழக துணை முதல்வரும், திமுக மாநில இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வடக்கு ஒன்றிய திமுக சார்பாக ஊத்தங்கரையில் நல திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது, நிகழ்ச்சிக்கு வடக்கு ஒன்றிய செயலாளர் மூன்றாம்பட்டி குமரேசன் தலைமை தாங்கினார், நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பர்கூர் சட்டமன்ற உறுப்பினரும், கிருஷ்ணகிரி திமுக கிழக்கு மாவட்ட செயலாளருமான மதியழகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு 500க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களுக்கு

இலவசமாக புடவைகள், இனிப்புகள், பிரியாணிகள், வழங்கினார் முன்னதாக வடக்கு ஒன்றிய அலுவலகம் ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார் நிகழ்ச்சிக்கு சிறப்பான ஏற்பாடு செய்த ஒன்றிய செயலாளர் மூன்றம்பட்டி குமரேசன் அவர்களை பாராட்டி பேசினார்

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் கதிரவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே,ஆர்,கே நரசிம்மன், கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் செல்வம் , ரஜினிசெல்வம், வசந்தரசு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் காந்தி, பேரூராட்சித் தலைவர் அமானுல்லா, கலை இலக்கிய அணி பிரிவு மாவட்ட துணை அமைப்பாளர் கிரி, இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சத்தியநாராயண மூர்த்தி, அசோக்குமார் ஒன்றிய துணை செயலாளர் ஜெயச்சந்திர பாண்டியன் மற்றும் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்சின்னதாய், விடுதலை சிறுத்தைகள் கட்சி கிழக்கு மாவட்ட செயலாளர் குபேந்திரன், வனிகரணி மாநிலத் துணைச் செயலாளர் அசோகன், மகளிர் விடுதலை இயக்க மாநில துணை பொது செயலாளர் ஜெயலட்சுமி, திமுக நகர செயலாளர் தீபக்,மாவட்ட துணை செயலாளர்கள் சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி நகர அவைத் தலைவர் தணிகை குமரன் , ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் மோகன், இளைய சூரியன், கழகப் பிரமுகர்கள் லிங்கா ஸ்டில் உரிமையாளர் கார்த்திக்,சீனு, மாவட்ட பிரதிநிதி இதயநாதன், காமராஜ், மற்றும் கூட்டணி கட்சியைச் சார்ந்த காங்கிரஸ் கட்சி பிரமுகர்கள் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம், ஆவிக்கொளப்பாக்கம் ஊராட்சியில் வசித்து வரும் கோவிந்தன் த/பெ. கேசவன் அவர்களின் வீடு மழையினால் இடிந்து சேதமடைந்ததை தொடர்ந்து நேரில் சென்று விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி பார்வையிட்டு நிதியுதவி மற்றும் நிவாரண பொருட்கள் வழங்கினார். மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர், திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் மு.தங்கம், திருக்கோவிலூர் மத்திய ஒன்றிய செயலாளர் கு.தீனதயாளன், நகர கழக செயலாளர் கோபிகிருஷ்ணன், நகர அவைத்தலைவர் குணா, ஒன்றிய துணை செயலாளர் ஏழுமலை, கிளை செயலாளர் சுப்ரமணி, வழக்கறிஞர் நிஜாம், ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் வெங்கடாசலம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு காணை ஒன்றிய கழகத்தின் சார்பில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் கல்பட்டு வி.இராஜா தலைமையில் ஒன்றிய பெருந்தலைவர் திருமதி. நா.கலைச்செல்வி, மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஆர்.பி.முருகன் ஆகியோரது முன்னிலையில் கழக இருவண்ணக் கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம்,பேனா உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள், அமைப்பாளர் வனிதா உடனிருந்தனர்.